தினமலர் 07/05/2022

# அவினாசிலிங்கம் 119வது பிறந்தநாள் விழா




அவினாசிலிங்கம் பல்கலை நிறுவனரின், 119வது பிறந்த நாள் விழா பல்கலையில் நடந்தது.

**கோவை, மே 7–**

அவினாசிலிங்கம் பல்கலை நிறுவனரின், 119வது பிறந்த நாள் விழா பல்கலையில் நடந்தது.

சென்னை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் துணைத்தலைவர் சுந்தரமூர்த்தி பேசுகையில், ''ஜாதி, மத பேதமற்ற கல்வியை அனைவரும் பெற ராமகிருஷ்ண மிஷன், சாரதாலயம், ஆகியவற்றை உருவாக்கியவர் அவினாசிலிங்கம். இந்நிறுவனங்கள் மூலம் கிராமப்புற மக்கள் கல்வியறிவு பெற வழி வகுத்தவர். மாணவர்களுக்கு கல்வி அளிப்பது மூலம், இந்தியாவை முன்னேற்றலாம் என எண்ணியவர்,'' என்றார்.

நிகழ்ச்சிக்கு, அவினாசிலிங்கம் கல்வி அறக்கட்டளை நிறுவனங்களின் நிர்வாக அறங்காவலர் மீனாட்சிசுந்தரம் தலைமை வகித்தார். பல்கலை துணைவேந்தர் பாரதி ஹரிசங்கர் வரவேற்றார்.

பல்கலை வேந்தர் தியாகராஜன், முன்னாள் வேந்தர் குழந்தைவேல், கோவை ஸ்ரீ லலிதாம்பிகா அறக்கட்டளையின் ஸ்ரீ ஜகத்மானந்தா சரஸ்வதி உள்ளிட்ட பலர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

நிகழ்ச்சியில், கோவை ஸ்ரீ லலிதாம்பிகா அறக்கட்டளையின் சுவாமிஜக ஸ்ரீ ஜகத்மானந்தா சரஸ்வதியின் வாழ்வியல் மதிப்பீட்டுக் கல்வி எனும் நூல் வெளியிடப்பட்டது. பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு, பரிசுகள் வழங்கப்பட்டன.